1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1975)

[1975 நவம்பர் 7

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

என்று நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

@ 223–239 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது

1975 நவம்பர் 7]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திருத்தம் கொடுத்துள்ள உறுப்பினர்கள் திருத்தத்தை முன்மொழிகிறார்களா ?

திருத்தம் முன்மொழியப்படவில்லை.

திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நான்கு சட்ட முன்வடிவுகளில் இது கடைசி சட்ட முன்வடிவு. இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படும் வேளையில் ஒரே ஒரு வார்த்தையை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக இம்மாதிரி மாநிலத்திலுள்ள முக்கியமான நிறுவனங்களைக் கையகப்படுத்துவது ஒரு நல்ல ஆரம்பம், நல்ல காரியம் என்பதால், அந்தக் காரியங்களை யாருமே ஆட்சேபிக்கவில்லை. முறையைத்தான் ஆட்சேபிக்கிறோமே தவிர, வேறொன்றுமில்லை. இந்த நான்கு நிறுவனங்களிலும் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மேனேஜ்மென்டில் பங்கு கொடுத்து, அவர்களையும் நன்கு உபயோகப்படுத்திக்கொள்வதற்கு ஒரு புது சம்பிரதாயம் ஏற்படுத்தும்படியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைத் தலைவரவர்களே, Labour participation in management—தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு கொடுக்க வேண்டுமென்பது இப்பொழுது எங்கு பார்த்தாலும் பேசப்படுகிற கருத்து. பத்திரிகைகளிலும் இதைப்பற்றிச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ரேடியோவில் கூட இது பற்றி ஒலி பரப்பப்படுகிறது. இது இன்றைய தினம் நாட்டில் ஒரு பெரிய கொள்கையாக இருந்து வருகிறது. எப்படியாயினும் இதை நிறைவேற்ற வேண்டும் என்பது தான் இந்த அரசின் எண்ணமும். மத்திய அரசு கூட தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு கொடுக்க வேண்டும் என்ற கருத்தில் ஆர்வம் கொண்டிருக்கிறது. நம்முடைய பாலிசியும் அதுதான். மத்திய அரசிடமிருந்து 'கைட்லைன்ஸ்' எல்லாம் வந்த பிறகு, அதுபற்றி நாம் முடிவு எடுக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 31 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சி கள் முடிவுற்றன. அவை மீண்டும் திங்கட்கிழமை (10—11—1975) பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6·26)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS